புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்

38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,

Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.

No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061

Cell: 7810068421,9488420449

neethiPress@ gmail.com

● மலர்: 01 ● இதழ்: 270 ● 05-04-2026 ● ஞாயிறு ● பக்கம்- 4 ● விலை- ரூ.5 ● திருச்சி- புதுச்சேரி

● Volum 01 ● Issue: 270 ● 05-04-2026 ● Sunday ● Pages - 4 ● Price- Rs. 5 ● Trichy-Puducherry


# ‘6மே வகுப்பில் இருந்து இனி மும்மொழிக் கொள்கை’

## சிபிஎஸ்இ அறிவிப்புக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கண்டனம்

சென்னை: ஏப்.5–

மும்மொழிக் கொள்கை என்பது, உண்மையில் இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை விரிவுபடுத்தும் முயற்சியாகும் என முதல்வர் ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், “தேசியக் கல்விக் கொள்கை 2020ஐச் சார்ந்து, அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சிபிஎஸ்இ பாடத்திட்டம் என்பது சாதாரண கல்விச் சீர்திருத்தம் அல்ல; அது மொழித் திணிப்பை நோக்கிய, நாம் நீண்டகாலமாக வெளிப்படுத்தி வந்த அச்சங்களை உறுதிப்படுத்தும் வகையிலான, நன்கு திட்டமிடப்பட்ட ஆழ்ந்த கவலைக்குரிய முயற்சியாகும்.

“இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம்” என்ற போர்வையில், இந்தியாவின் செழுமையான மற்றும் பன்மைத்துவம் நிறைந்த மொழிப் பாரம்பரியத்தைத் திட்டமிட்டு ஒதுக்கி, இந்திக்கு முன்னுரிமை அளித்து மையப்படுத்தும் செயலை அரசியல் நோக்கத்துடன் பா.ஜ.க. தலைமையிலான என்டி ஏ அரசு தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. “மும்மொழிக் கொள்கை” என்பது, உண்மையில் இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை விரிவுபடுத்தும் முயற்சியாகும்.

தென் மாநில மாணவர்களைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம், கட்டாய இந்தி என்பதைக் கடந்து வேறேதுமில்லை. இருப்பினும், இதில் ஒருவருக்கொருவர் இடையிலான பரிமாற்றம் எங்கே இருக்கிறது? இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் அல்லது வங்கம், மராத்தி உள்ளிட்ட மொழிகளைக் கட்டாயமாகப் படிப்பார்களா? இதுகுறித்த தெளிவின்மை, இதிலுள்ள ஒருசார்பையும் பாகுபாட்டையும் வெளிப்படுத்துகிறது.

இந்த முரண் வெளிப்படையானது, இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழைக் கட்டாயமாக்க முடியாத தொடர்ச்சியாகப் போதிய தமிழாசிரியர்களை நியமிக்கத் தவறிய இதே ஒன்றிய அரசு, இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம் என்று




மாநிலங்களுக்குப் பாடம் எடுக்க நினைக்கிறது. இது பொறுப்புணர்வல்ல; கபட நாடகத்தின் உச்சம்.

ஆசிரியர்களின் எண்ணிக்கை, போதிய பயிற்சிக்கான திறன் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவை குறித்த உண்மைக் களநிலவரத்தை ஒன்றிய அரசு உணர்ந்திருக்கிறதா? இந்தச் செயல்திட்டத்தை அமல்படுத்த தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் எங்கே இருக்கிறார்கள்? கல்வித் துறையில் மிகப்பெரிய சுமையை ஏற்படுத்தும் இந்த நகர்வுக்கான நிதி ஆதாரம் எங்குள்ளது? எவ்விதத் திட்டமிடலும், வளங்களும், பொறுப்பும் இல்லாத உள்நோக்கம் கொண்ட மற்றுமோர் திட்டமாகவே இது தோன்றுகிறது.

இது மொழி குறித்த கேள்வி மட்டுமல்ல; நியாயம், கூட்டாட்சி மற்றும் சமவாய்ப்புகள் குறித்த கேள்விகளுமாகும். இந்தி பேசும் மாணவர்களைக் கட்டமைப்புரீதியான சலுகைகளை அளித்து, உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் அவர்களுக்கு ஆதாயம் ஏற்படுத்துவதோடு, மாநிலங்களுக்கிடையே மேலும் ஏற்றத்தாழ்வுகளையே இது உண்டாக்கும்.

முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் உலகம் முன்னோக்கி நகரும் வேளையில், நம் குழந்தைகள் எதிர்காலத்திற்காகத் தயாராக இருக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவு, அனிமேஷன் விஷுவல் எஃபெக்ட்ஸ் கேமிங் காமிக்ஸ் உள்ளிட்ட துறைகளில் அவர்களது திறனை மேம்படுத்தி, அவர்களது அறிவியல் பார்வையையும் திறனாய்வுச் சிந்தனையையும் ஊக்குவிக்க வேண்டும். மாறாக, இத்தகைய பிற்போக்குத்தனமான, இறுக்கமான மொழிச் சுமை அவர்களது முன்னேற்றத்தைத் தடுப்பதாக உள்ளது.

தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் தொடர்ச்சியாக எழுப்பிய நியாயமான ஜனநாயகப்பூர்வமான கவலைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, இந்தியைத் திணிப்பதில் ஒன்றிய அரசு மும்முரமாக இருப்பது தெரிகிறது. இந்தச் செயல், கூட்டுறவுக் கூட்டாட்சியியலுக்கு எதிரானது, கோடிக்கணக்கான இந்தியர்களின் மொழி அடையாளங்களை நேரடியாக அவமதிக்கும் செயல்.

இந்தியாவின் வலிமை என்பது, பன்முகத்தன்மையில்தான் இருக்கிறதே தவிர, திணிக்கப்படும் ஒற்றைத்தன்மையில் இல்லை. இந்தச் சமநிலையைக் குலைக்கும் எத்தகைய முயற்சிகளும் தவறானவை மட்டுமல்ல, ஆபத்தானதுமாகும். நம் நாட்டின் அடிப்படையான பன்மைத்துவத்தையே தாக்கும் இத்தகைய கொள்கைகள் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டியவையாகும். பழனிசாமி தலைமையிலான அதிமுகவும், அதன் என் டி ஏ கூட்டணிக் கட்சிகளும் இந்தத் திணிப்பை ஏற்றுக்கொள்கின்றனரா? அல்லது நமது மாணவர்களின் எதிர்காலம், அடையாளம் மற்றும் உரிமைகளுக்காக ஒரே ஒருமுறையாவது முதுகெலும்போடு எதிர்ப்பார்களா?” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

202627ம் கல்வியாண்டு முதல் தேசிய கல்விக் கொள்கையின்படி பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் மும்மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும் என்று சிபிஎஸ்இ அறிவித்துள்ள நிலையில், மு.க. ஸ்டாலின் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.




# திமுக கூட்டணிக்கு ஆதரவு.. கொங்குநாடு திராவிட கட்சி அறிவிப்பு.



ஈரோடு. ஏப்ரல். 05

வருகின்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணிக்கு தங்களின் ஆதரவை தெரிவிப்பதாக கொங்குநாடு திராவிட கட்சி அறிவித்துள்ளது.

வருகின்ற ஏப்ரல் 23ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளது.

இதனைத் தொடர்ந்து அரசியல் கட்சிகள் தங்களின் வேட்பாளர்களை அறிவித்து தேர்தல் களத்தில், மக்களை சந்தித்து வாக்கு சேகரித்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஈரோடு கொங்கு நாடு திராவிட கட்சி, முக்கா தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு நிபந்தனை அற்ற ஆதரவை தெரிவிப்பதாக அறிவித்துள்ளது.

அக்கட்சியின் நிறுவனத் தலைவர் பாட்டன் ஏஜ் சக்திவேல் தலைமையில் அக்கட்சி நிர்வாகிகள், துணை முதல்வரும் திமுக இளைஞர் அணி செயலாளர் ஆன உதயநிதி ஸ்டாலினை சென்னையில் நேரில் சந்தித்து தங்களின் ஆதரவை தெரிவித்தனர்.

தொடர்ந்து ஈரோடு மாவட்டத்தில் உள்ள எட்டு தொகுதிகளிலும் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்யவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

# அரியலூர்... கல்லங்குறிச்சி கலியுக வரதராஜ பெருமாள் கோவில் தேரோட்டம்... கோவிந்தா கோவிந்தா பக்த கோசத்துடன் தேரை வடம் பிடித்த பக்தர்கள்...



அரியலூர் மாவட்டம் கல்லங்குறிச்சியில் உள்ள அருள்மிகு கலியுக வரதராஜ பெருமாள் திருக்கோயில் தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து பெருமாளை தரிசனம் செய்தனர்.

அரியலூர் அருகேயுள்ள கல்லங்குறிச்சி அருள்மிகு கலியுக வரதராஜ பெருமாள் கோவில் மிகவும் பிரசித்தி பெற்ற திருத்தலமாகும். திருப்பதி செல்ல முடியாத விவசாயிகள், இந்த ஆலயத்தில் உள்ள கலியுக வரதராஜ பெருமாளை, தங்கள் வயலில் பயிரிட்ட விளைச்சல் நல்ல மகசூல் கிடைக்கவும், தங்களது விவசாயத்திற்கு உறுதுணையாக உள்ள ஆடு, மாடுகள் பூரண நலத்துடன் விளங்கவும் வேண்டிக் கொண்டு, ஆண்டு திருவிழாவின் போது தங்களது வயலில் விளைந்த தானியங்களையும், ஆடு, மாடுகளையும் காணிக்கையை செலுத்துவது வழக்கம். இதனால் இக்கோவில் ஏழைகளின் திருப்பதி என்று அழைக்கப்படுகிறது. திருச்சி, தஞ்சாவூர், நாகை, சேலம், விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல லட்சம் மக்களின் குலதெய்வ தளமாக இக்கோவில் விளங்குகிறது. இச்சிறப்பு பெற்ற கலியுக வரதராஜ பெருமாள் கோவில் ஆண்டு பெருந்திருவிழா கடந்த 17ம் தேதி ஸ்ரீராமநவமி அன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. ஐந்தாம் நாள் திருவிழாவான வெள்ளி கருட சேவையை தொடர்ந்து, ஏழாம் நாள் திருவிழாவான திருக்கல்யாணம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று நடைபெற்றது. கோவிலில் இருந்து ஊர்வலமாக அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீதேவி பூதேவி சமேத அருள்மிகு வரதராஜ பெருமாள் எடுத்துவரப்பட்டு பெரிய தேரில் எழுந்தருளினார். இதனைத் தொடர்ந்து, ஆதீன பரம்பரை தர்மகர்த்தா தேரை வடம் பிடித்து இழுக்க, ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவிந்தா கோவிந்தா என்ற நாமக்கோசத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்தனர். ஸ்ரீ ஹனுமான் சிறிய தேர் முன்னே செல்ல, ஸ்ரீதேவி பூதேவி சவேத அருள்மிகு வரதராஜ பெருமாள் வீற்றிருக்கும் பெரிய தேர் நான்கு வீதிகளிலும் வலம்வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

லட்சக்கணக்கான பக்தர்கள், வரதராஜ பெருமாளை கண்டு தரிசனம் செய்தனர். திருச்சி, தஞ்சாவூர், பெரம்பலூர், கும்பகோணம், சேலம், கடலூர் உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஸ் பா. சாஸ்திரி தலைமையில் நூற்றுக்கணக்கான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# பருகூர், ஊத்தங்கரை தொகுதிகளில் சுயேச்சை வேட்பாளராக ஓம்சக்தி அம்மா போட்டி: 500க்கும் மேற்பட்ட ஆதரவாளர்கள் மலர் தூவி உற்சாக வரவேற்பு!







கிருஷ்ணகிரி. ஏப்.5–

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் முக்கியத் தொகுதிகளான பருகூர் மற்றும் ஊத்தங்கரை ஆகிய இரண்டு சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் சுயேச்சை வேட்பாளராகக் களம் இறங்குகிறார் காட்டாகரம் ஓம்சக்தி அம்மா (சி. கீதா).

ஒரே நேரத்தில் இரண்டு தொகுதிகளில் சுயேச்சையாகப் போட்டியிடும் முதல் பெண் வேட்பாளர் என்ற வரலாற்றுச் சிறப்பை இவர் பெற்றுள்ளார்.

தொண்டர்கள் உற்சாகம் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்காக ஓம்சக்தி அம்மா வருகை தந்தபோது, பருகூர் மற்றும் ஊத்தங்கரை பகுதியைச் சேர்ந்த 500 க்கும் மேற்பட்ட ஆதரவாளர்கள் திரண்டனர். வழிநெடுகிலும் அவருக்கு ஆதரவாக முழக்கமிட்ட தொண்டர்கள், மலர்களைத் தூவி உற்சாகமாக வரவேற்றனர். விழாக்காலம் போல காட்சியளித்த இந்த நிகழ்வு பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது. இரண்டு தொகுதிகளில் களம் காணும் இவர், தனது வேட்பு மனுவைத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்தார்.

இரண்டு தொகுதிகளிலும் ஒரே நேரத்தில் போட்டியிடும் முதல் பெண் வேட்பாளர் என்பதால், கிருஷ்ணகிரி மாவட்ட தேர்தல் களம் தற்போது சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

# திருவாரூரில் மே 5ம் தேதி 43வது வணிகர் தின மாநாடு: விக்கிரமராஜா அறிவிப்பு

சென்னை: ஏப்.5–

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் 43வது வணிகர் தின மாநாடு மே 5ம் தேதி திருவாரூரில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து பேரமைப்பின் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் 43வது வணிகர் தின மாநாடு, வணிகர் விழிப்புணர்வு எழுச்சி மாநாடாக திருவாரூரில் மே 5ம் தேதி நடத்தப்பட்ட உள்ளது.

மாநாட்டுப் பந்தல் கால்கோள் விழா ஏப்.5ம் தேதி காலை 10.05 மணிக்கு நடைபெறும். ஆங்கிலேய ஆட்சியாளர்களால் அமல்படுத்தப்பட்ட சட்டங்களின் அடிப்படையில், வணிகர்களை சமூக விரோதிகளாக சித்தரிக்கும் நிலையை மாற்றி அமைக்க வேண்டும்.

தேசத்துக்கான வருவாயை ஈட்டுவதற்கான கட்டமைப்பை கொண்டிருக்கும் வணிகர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரிக்கும் நிலை உருவாக வேண்டும்.

அதற்கான விழிப்புணர்வு, எழுச்சியை வணிகர்களிடம் ஏற்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம், பெருந்துறை சாலை, திண்டல், ஏழைகளின் சிறிய சகோதரிகள் முதியோர் இல்லத்தில் மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இசையுடன் தேர்தல் விழிப்புணர்வு பாடல் பாடிய முதியோருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களைத்தெரிவித்தார்.

# புதுச்சேரியில் மொத்த மதுபானங்கள் விற்பனைக்கு தடை விதித்து கலால்துறை உத்தரவு

புதுச்சேரி: ஏப்.5–

புதுச்சேரியில் மொத்த மதுபானங்கள் விற்பனைக்கு தடை விதித்து கலால்துறை உத்தரவிட்டுள்ளது. புதுச்சேரியில் மதுபானம் விற்பனைக்கு ரசீது கட்டாயம் வழங்க வேண்டும். விதிகளை மீறினால் மதுக்கடையின் உரிமம் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ ரத்து செய்யப்படும். பரிந்துரைக்கப்பட்ட வரம்புக்கு மேல் மதுபானம் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது

# திருவள்ளூர் மாவட்ட பா.ஜ.க அலுவலகத்தில் வேட்பாளர் அறிமுகம் பா.ஜ.க நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்



திருவள்ளூர் ஏப் 05 : திருவள்ளூர் மாவட்ட பா.ஜ.க அலுவலகத்தில் அதிமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பி.வி.ரமணாவின் அறிமுகம் மற்றும் பா.ஜ.க நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பா.ஜ.க மாவட்ட தலைவர் ராஜசிம்மா மகேந்திரா என்ற அஷ்வின்குமார் தலைமை தாங்கினார்.

அப்போது அங்கு வருகை தந்த வேட்பாளர் பி.வி.ரமணா கட்சி நிர்வாகிகளிடம் ஆலோசனை வழங்கினார். அப்போது, கூட்டணி நிர்வாகிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு பணியாற்ற வேண்டும். மேலும், மத்திய அரசு மூலம் மாநிலத்திற்கு கிடைத்துள்ள பல்வேறு திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்றார். மேலும், அதிமுக மற்றும் பா.ஜ.க கூட்டணி குறித்து திமுக செய்து வரும் பொய்ப்பிரசாரத்தை முறியடிக்க வேண்டும். கிராமங்கள் தோறும் வீடு, வீடாக சென்று கட்சி நிர்வாகிகள் வாக்குகளை சேகரிக்க வேண்டும். தேர்தலில் வெற்றி பெற்றால் அனைவரையும் ஒருங்கிணைத்து செயல்படுவேன். தொகுதிக்கு வேலைவாய்ப்பு மற்றும் அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பேன். மேலும், திருவாலங்காட்டில் உள்ள சர்க்கரை ஆலையை நவீன மயமாக்கல் உள்ளிட்ட நீண்ட நாள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்றார்.

கூட்டத்தில் மக்களவைத் தொகுதி பொறுப்பாளர் லோகநாதன், ஓபிசி அணி பிரிவு மாநில செயலாளர் ராஜ்குமார், மாவட்ட பொதுச்செயலாளர் கருணாகரன், மாவட்ட செயலாளர் பன்னீர் செல்வம், மாவட்ட துணை தலைவர் பாலாஜி, மாவட்ட மருத்துவ அணி பிரிவு தலைவர் லோகேஷ் பிரபு, பொருளாதார பிரிவு மாவட்ட தலைவர் சதீஷ்குமார், நிர்வாகிகள் ரவிக்குமார், பழனி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# விழுப்புரம் அருகே ஒட்டனந்தல் முருகன் கோயிலில் 9 எலுமிச்சம் பழங்கள் ரூ.1.43 லட்சத்துக்கு ஏலம்

விழுப்புரம்: ஏப்.5–

திருவெண்ணெய்நல்லூர் அடுத்த ஒட்டனந்தல் கிராமம் இரட்டைக் குன்றின் மீது ரத்தினவேல் முருகன் கோயில் உள்ளது. கருவறையில் வேல் மட்டுமே இருக்கும். இக்கோயிலில் பங்குனி உத்திர திருவிழா கடந்த 1ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

பங்குனி உத்திர திருவிழா உற்சவத்தில்வேலில் தினசரி படைக்கப்படும் 9 எலுமிச்சம் பழங்கள், இடும்பன் பூஜையில் வைத்து ஏலம் விடும்நிகழ்வு நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்றது. முதல் நாள் எலுமிச்சம் பழம், ரூ.45 ஆயிரத்து 500க்கு ஏலம் போனது.

இதேபோல் இதர 8 பழங்களும் ரூ.15 ஆயிரம், ரூ.16 ஆயிரத்துக்கு ஏலம் போனது. இதன்மூலம் 9 எலுமிச்சம் பழங்களையும் ரூ.1 லட்சத்து 43 ஆயிரத்துக்கு பக்தர்கள் ஏலம் எடுத்தனர்.

வேலில் சொருகப்பட்ட எலுமிச்சம் பழத்தை உட்கொண்டால், குழந்தை வரம், திருமணம் கைகூடுதல் மற்றும் குடும்ப பிரச்சினைகள் நீங்கும் என்பது இக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் நம்பிக்கையாகும்.

ஏலத்தில், விழுப்புரம் மட்டுமின்றி பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பக்தர்கள் பங்கேற்றனர். எலுமிச்சம் பழத்தை ஏலம் எடுத்தவர்கள், தங்கள் உடலில் தண்ணீரை ஊற்றிக் கொண்டு பூசாரி முன்பு மண்டியிட்டு எலுமிச்சம் பழத்தை பெற்றுக் கொண்டனர். இடும்பனுக்கு படைக்கப்பட்ட கருவாட்டு குழம்பு சாதம் பிரசாதமாக அனைவருக்கும் வழங்கப்பட்டது.

# பகுஜன் சமாஜ்கட்சியில் வேட்பு மனு தாக்கல் செய்த வேட்பாளர்..




திருப்பூர்: ஏப்05

(பகுஜன் சமாஜ்கட்சி) ஒரு இந்திய அரசியல் கட்சியாகும். இது கான்ஷிராம் என்பவரால் ஏப்ரல் 1984இல் தோற்றுவிக்கப்பட்டது. இது தலித்துகள் எனப்படும் தாழ்த்தப்பட்டோரை பிரதிநிதிப்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட கட்சியாகும். இதன் சின்னம் யானை. 2001இல் கன்ஷிராம் தன்னுடைய அரசியல் வாரிசாக மாயாவதியை அறிவித்தார்.இந்திய தேசிய கட்சி பகுஜன் சமாஜ் கட்சியின் திருப்பூர் தெற்கு தொகுதி வேட்பாளராக (செஞ்சோலை சேகர் )என்கின்ற ரங்கசாமி

திருப்பூர் மாநகராட்சியில் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு மாநிலத் தலைவர் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் ஆனந்தன்.

மேற்கு மண்டல ஒருங்கிணைப்பாளர் ஈஸ்வரன். திருப்பூர் மாவட்ட தலைவர். விக்டர் மனோவ ஆலோசனையின் படி மாநகராட்சி ஆணையாளர் அமித் அவர்களிடம்வேட்பு மனு தாக்கல் செய்தார். கலந்து கொண்டனர்.

# கருணையைப் போற்றும் கிறிஸ்தவப் பெருமக்களுக்கு, ஈஸ்டர் பண்டிகை வாழ்த்துகள்: வைகோ

சென்னை: ஏப்.5–

கருணையைப் போற்றும் கிறிஸ்தவப் பெருமக்களுக்கு, வைகோ ஈஸ்டர் பண்டிகை வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில்; மூப்பர்களாலும்,வேத பாரகர்களாலும் பழி தூற்றப்பட்ட இயேசு, தேசாதிபதியாகிய பொந்திய பிலாத்து சபையில் நிறுத்தப்பட்டார். சதிகாரர்களின் காட்டுக் கூச்சலால் வேறு வழி இன்றி, இயேசுவை சிலுவையில் அறையுமாறு ஒப்புக் கொடுத்தான். இயேசுவின் தலையில் முள்முடி சூட்டி, முகத்தில் காரித்துப்பி, கன்னத்தில் அறைந்து, வாரினால் அடித்துச் சித்திரவதை செய்தனர். கபாலஸ்தலம் எனும் கொல்கொதாவில், சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்வர்களுக்கு நடுவே, அவரும் சிலுவையில் அறையப்பட்டார்.

'தேவாலயத்தை இடித்து மூன்று நாளுக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக் கொள்' என்று நிந்தித்தனர். இருளைக் கிழித்து ஒளி எழுதல்போல,ஒருபுனித வெள்ளிக்கிழமை அன்று, சிலுவையில் அறையப்பட்டு, இரத்தம் சிந்திய கிறிஸ்து இயேசுநாதர், மனிதகுலத்தின் அவலத்தைப் போக்க மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த உன்னதத்தை, ஈஸ்டர் பண்டிகையாக உலகெங்கும் உள்ள கிறிஸ்தவப் பெருமக்கள் கொண்டாடுகின்றனர். இயேசு உயிர்த்தெழுந்தார், துக்கத்தில் இருந்து உலகம் மீண்டது.கொடுந்துயரில் தவிப்பவர்களுக்கும், மரண இருளில் கலங்குகின்றவர்களுக்கும், அநீதியின் பாரத்தால் நசுக்குண்டவர்களுக்கும், விடியலும் நீதியும் ஒருநாள் உதிக்கவே செய்யும் என்ற நம்பிக்கையை அவர்களது மனங்களில் ஈஸ்டர் வழங்குகிறது.

அன்புச் சகோதரர் மாண்புமிகு தளபதி முகஸ்டாலின் தலைமையில் தமிழகத்தில் அற்புதமான ஆட்சி அமைந்துள்ளது. 2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்குப் பின்னரும் மாண்பமை தளபதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சி தொடரும். கூட்டாட்சித் தத்துவம் வெற்றிபெறவும், மாநில சுயாட்சி மலரவும், சனாதன இந்துத்துவா சக்திகளின் முயற்சிகளை முறியடிக்கவும் இந்நாளில் சபதம் ஏற்போம். மரண பயங்கரத்துக்கு ஆளாகி, துயர இருளிலும், கண்ணீரிலும், துடிதுடித்துவாடும் ஈழத்தமிழ் மக்களுக்கும் நீதி கிடைக்கும்; விடியல் உதிக்கும். அதற்காக இந்த ஈஸ்டர் திருநாளில், தமிழ்க்குலம் உறுதி எடுக்கட்டும்.

கருணையைப் போற்றும் கிறிஸ்தவப் பெருமக்களுக்கு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், ஈஸ்டர் பண்டிகை வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# பள்ளிபாளையத்தில் நடைபெற்ற திமுக செயல் வீரர்கள் கூட்டம்.. குமாரபாளையம் தொகுதி வேட்பாளர் எஸ். பாலுவின் வெற்றிக்கு உழைக்க வியூகம்..






பள்ளிபாளையம். ஏப்ரல் 05

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் பாலுவை ஆதரித்து செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் வேட்பாளரின் வெற்றிக்கான செயல் வீரர்களின் ஆலோசனை நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் இந்த மாதம் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. அதனைத் தொடர்ந்து அடுத்த மாதம் மே 4 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் திமுக தலைமையிலான கூட்டணியும், அதிமுக பாஜக தலைமையிலான கூட்டணியும் தங்களின் வேட்பாளர்களை அறிவித்து தேர்தல்களில் தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிக்கு திமுக தலைமையிலான மதசார்பற்ற ஜனநாயக கூட்டணி திமுக வேட்பாளராக எஸ். பாலு அறிவிக்கப்பட்டார்.

திமுக வேட்பாளர் பாலு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து அவருக்கு திமுகவினர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஊர் முக்கிய பிரமுகர்கள் என பல தரப்பினரும் வந்து நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் குமாரபாளையம் தொகுதியில் திமுக வேட்பாளர் பாலுவின் வெற்றிக்கு வியூகம் அமைக்கும் விதமாக, செயல்வீரர்கள் கலந்து கொள்ளும் செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று காலை, பள்ளிபாளையம் அருகே உள்ள ஆலம் பாளையத்தில் உள்ள குமரன் மாகாளில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் இந்த முறை குமாரபாளையம் தொகுதியை கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்பில் ஆர்வம்காட்டி பல ஆலோசனை களை வழங்கி பேசினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் நாமக்கல் காந்தி செல்வன், நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் கே. எஸ் மூர்த்தி, மாநில விவசாய அணி துணைச்செயலாளர் வெப்படை செல்வராஜ், ஒன்றிய செயலாளர்கள் இளங்கோவன், தளபதி செல்வம், நாச்சிமுத்து, நகர் மன்ற தலைவர்கள் பள்ளிபாளையம் செல்வராஜ், குமாரபாளையம் விஜய் கண்ணன், ஆலம்பாளையம் பேரூர் திமுக செயலாளர் கார்த்திக் ராஜ், காங்கிரஸ் கட்சி பிரமுகர் பிடி தனகோபால் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் மற்றும் வாக்குப்பதிவு, வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட பணிகளில் செயல்பட வேண்டிய விதம் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.



2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 140– திருச்சிராப்பள்ளி மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பழைய மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை திருச்சிராப்பள்ளி கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலர் பாலாஜி மற்றும் உதவி ஆட்சியர் சேஷத்ரிமயும் தீபுசானு ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஆணையர் இராஜேந்திரன், திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் சாலை தவவளன், திட்ட இயக்குனர் சுரேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் ஊத்துக்கோட்டை பிரதான சாலை பகுதியில் சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் :



திருவள்ளூர் ஏப் 05 :

திருவள்ளூர் வட்டம் மற்றும் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவள்ளூர் ஊத்துக்கோட்டை பிரதான சாலையில் அமைந்துள்ள வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் கீழ் செயல்படும் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் "தேர்தல் திருவிழாதமிழ்நாட்டின் பெருவிழா" சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் தலைமையில் அனைவரும் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்,

தொடர்ந்து அனைவரும் வாக்களிப்போம் வாசக வடிவில் விவசாயிகளுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டு, 500க்கும் மேற்பட்ட விவசாயிகள், மாட்டு வண்டிகள் மற்றும் டிராக்டர் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்து, கலந்து கொண்டு, பின் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தேர்தல் விழிப்புணர்வு சிறுதானிய உருவ சிலையினை திறந்து வைத்து, செல்ஃபி பூத்தில் விவசாயிகளுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டு பேசினார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளிலும் அந்தந்த தேர்தல் நடத்தும் அலுவலர்கள் அவர்கள் சார்ந்த சட்டமன்ற தொகுதி சார்ந்த வேட்பாளர் களின் மனுக்களை பெற்று அதற்கான பரிசீலனை செய்து கொண்டு வருகிறார்கள். அதேபோல் மாவட்டத்தில் 100% வாக்களிப்பினை கொண்டுவர வேண்டும். 100% வாக்களிப்பு உள்ள மாவட்டமாக திருவள்ளூர் மாவட்டம் மாற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகத்தின் வாயிலாக மேற்கொண்டு வருகிறோம். அதனை ஸ்வீப் என்று சொல்வோம்.அதன்படி. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துறைசார்ந்த மக்களை சந்தித்து அவர்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம்.

ஒவ்வொரு இடங்களிலும் அந்தந்த வட்டார உதவி இயக்குநர்கள் தலைமையில் ஒவ்வொரு இடங்களிலும் விவசாயிகளை சந்தித்து அவர்கள் நியாயமாக வாக்களிக்க வேண்டும். எவ்வித தூண்டுதல் இன்றியும் அவர்கள் தங்களுக்கு பிடித்த வேட்பாளரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நோக்கமிருக்கிறதோ அவர்களை வேறெந்த தூண்டுதல் இன்றியும் சுதந்திரமாக அவர்கள் வாக்களிக்க வேண்டும், சுதந்திரமாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு திருவள்ளூர் மாவட்டத்தில் அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட தேர்தல் அலுவலர் கூறினார்.

இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை.ஜெயக்குமார், இணை இயக்குநர் (வேளாண்மை) க. செல்வராஜு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) க.வேதவல்லி, துணை இயக்குநர் (தோட்டக்கலைத் துறை) ர.குமரவேல், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ராஜவேல், வேளாண் வணிக துணை இயக்குநர் சசிரேகா வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) ஸ்ரீசங்கரி, வேளாண்மை உதவி இயக்குநர் (பயிர் காப்பீடு)சரமேஷ், திரளான விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர் கள் கலந்து கொண்டனர்.

# வாக்குப்பதிவு இயந்திரத்தில் வேட்பாளர் வரிசை சீட்டில் வண்ணப் புகைப்படம்: தேர்தல் கமிஷன் தகவல்

சென்னை: ஏப்.5–

வாக்குப்பதிவு இயந்திரத்தில் வேட்பாளர் வரிசை சீட்டில், வேட்பாளரின் வண்ணப் புகைப்படம் ஒட்டப்படும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. இதற்கு முன் நடந்த தேர்தல்களில் இவிஎம் இயந்திரத்தில் வேட்பாளர் பெயர் சீட்டில் மூன்று வரிசை இருக்கும். முதல் வரிசையில் வரிசை எண், இரண்டாம் வரிசையில் வேட்பாளரின் பெயர், மூன்றாம் வரிசையில் அவருக்கான தேர்தல் சின்னம் இடம் பெற்றிருக்கும்

இந்த முறை வேட்பாளரின் வண்ண புகைப்படத்தையும் இணைப்பதற்கு தேர்தல் கமிஷன் முடிவு செய்துள்ளது. இரண்டாம் வரிசையில் இடம் பெற்றுள்ள வேட்பாளரின் பெயருக்கு அடுத்தபடியாக வேட்பாளரின் வண்ண புகைப்படம் வைக்கப் படும். முதலாவது, அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகளின் வேட்பாளரின் பெயர்கள், அகர வரிசையில் (அந்தந்த மாநில மொழியில்) வரிசைப்படுத் தப்படும். 2வதாக, அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சிகளின் வேட்பாளரின் பெயர்கள் வரிசைப்படுத்தப்படும். 3வதாக, அங்கீகரிக்கப் படாத பதிவு பெற்ற கட்சிகளின் வேட்பாளர் பெயர்கள் அகர வரிசையில் வரிசைப் படுத்தப்படும். 4வதாக சுயேச்சை வேட்பாளர் களின் பெயர்கள் அகர வரிசையில் வரிசைப் படுத்தப் படும். கடைசி பெயராக நோட்டா இடம் பெறும். அகர வரிசைக்காக, பெயர்களின் முதல் எழுத்தே கருத்தில் கொள்ளப்படும் என்று தேர்தல் அதிகாரி கூறினார்.






புதுச்சேரி அரியாங்குப்பம் தொகுதியில் நாடாளும் மக்கள் கட்சி சார்பில் போட்டியிடும் ரத்தினம் பேனாமுனை சின்னத்திற்கு வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார். ஒவ்வொரு வீட்டிலும், நாங்கள் மாற்றத்தை விரும்புகிறோம், உங்கள் கள பணியை முன்பே பார்த்திருக்கிறோம், பாராட்டியிருக்கிறோம் நிச்சயம் உங்களுக்கு ஆதரவு உண்டு என மக்கள் தெரிவித்தனர்.

# சமீப காலமாக புதுவை காங்கிரஸ்



புதுச்சேரி காங்கிரஸில் சமுதாய ரீதியாக சில சமுதாயத்திற்கு தலைவர் பதவிகள் முதலமைச்சர் வேட்பாளர் பதவிகள் குறிப்பாக பறிக்கப்படுகிறது குறிப்பாக வன்னியர் சமுதாயத்தை சேர்ந்த திரு ஆனந்த ராமன் நாடார் சமுதாயத்தை சேர்ந்த திரு நாராயணசாமி முதலியார் சமுதாயத்தை சேர்ந்த திரு வைத்தியநாதன் மீனவர் சமுதாயத்தை சேர்ந்த திரு ஏ வி எஸ் சுப்பிரமணியம் சிறுபான்மை சமுதாயத்தை சேர்ந்த திரு ஷாஜகான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த திரு கந்தசாமி அவர்கள் இது போன்ற தலைவர்கள் இருக்கும் வேளையிலே காங்கிரஸ் தலைவர் பதவி மறுக்கப்படுகிறது ஒரே நபர் வைத்தியலிங்கம் இடம் உள்ளது இதை கட்சி தலைமையிடம் கண்டு கொள்ளாமல் இருப்பது வேதனை அளிக்கிறது திரு மதிப்பு கூறிய திரு ராகுல் காந்தி அவர்கள் என்ன செய்கிறார் இந்த விஷயங்கள் அவர்களுக்கு எட்டப்படுகிறதா இந்த சமுதாயத்திற்கும் முக்கிய பதவிகள் தரவில்லை அனைத்து பதவிகளும் ஒரே நபர் ஒரு வைத்தியலிங்கம் அவர்கள் வைத்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் கட்சி தலைவர் பதவி இப்போது சட்டமன்ற உறுப்பினரை போட்டியிட தட்டாஞ்சாவடி தொகுதியில் மனு தாக்கியுள்ளார் அந்த தொகுதி யாது திரு நாராயணசாமி அவர்களுக்கு ஒதுக்கி இருக்கலாம் ஏனென்றால் புதுவையிலே எதிர்கட்சியாக தொடர்ந்து மக்கள் பிரச்சனைகளை கையில் எடுத்து போராட்டங்கள் நடத்தி அரசுக்கு எடுத்துரைத்தார் எதிர்க்கட்சியாக இருந்தவர்கள் மற்றும் காங்கிரஸிலே பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் மௌனம் காத்து வந்தார் எதிர்க்கட்சியாக செயல்பட்டவர் நாராயணசாமி அவர்கள் தான் அவரையே புறக்கணிக்கப்படுகிறார்கள் எனவே நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் திரு வைத்திலிங்கம் அவர் தலைமையிலே இருக்கும் காங்கிரஸ் திமுக கூட்டணியை முறியடிக்க வேண்டும் புதுச்சேரி மக்கள் மிக கவனமாக செயல்பட வேண்டும் என்றுவன்னிய முன்னேற்ற இயக்கம் தலைவர் கே லிங்குசாமி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

# பர்கூர் தொகுதி தேர்தல் அறிக்கை: சுயேச்சை வேட்பாளர் இரா. மாதேஷ் வெளியிட்ட அதிரடி வாக்குறுதிகள்!



தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், கிருஷ்ணகிரி மாவட்டம் .பர்கூர் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் வீரமலை கிராமத்தை சேர்ந்த இரா. மாதேஷ், தனது தொகுதிக்கான பிரத்யேக தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளார். "மாற்றத்தின் புதிய முகம்" என்ற முழக்கத்துடன் களமிறங்கும் அவர், விவசாயம், கல்வி மற்றும் அடிப்படை வசதிகளுக்கு முன்னுரிமை அளிப்பதாக உறுதியளித்துள்ளார்.

விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம்

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பின்வரும் திட்டங்களை அவர் முன்வைத்துள்ளார்:

கிருஷ்ணகிரி அணையின் உபரி நீரை கால்வாய்கள் மூலம் ஏரி மற்றும் குளங்களுக்குக் கொண்டு சென்று நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துதல்.

தக்காளி, மாம்பழம் உள்ளிட்ட விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க உறுதி செய்தல்.

குளிர்சாதன கிடங்குகள் மற்றும் விவசாயப் பொருட்கள் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை அமைத்தல். ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு டிராக்டர் இலவசமாக வழங்கப்படும்.

கல்வி மற்றும் வேலை வாய்ப்பு: இளைஞர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு:

போச்சம்பள்ளியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி அமைத்தல்.

சிப்காட் (SIPCOT) தொழிற்பேட்டையில் 80% வேலைவாய்ப்பு உள்ளூர் இளைஞர்களுக்கே வழங்க நடவடிக்கை எடுத்தல்.

12 ஆம் வகுப்பில் முதலிடம் பெறும் மாணவர்களின் உயர் கல்விச் செலவை தனது சொந்தச் செலவில் ஏற்றுக்கொள்வதாக அறிவிப்பு.

அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதாரம்: அனைத்து கிராமங்களுக்கும் தரமான தார்ச் சாலைகள் மற்றும் பேருந்து வசதி.

அரசு மருத்துவமனைகளில் 24 மணி நேர நவீன மருத்துவச் சேவை.

தூய்மையான குடிநீர் மற்றும் முறையான கழிவுநீர் வடிகால் அமைப்பு.


சமூக நலன்: பெண்கள் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் மற்றும் பயிற்சி அளித்தல்.

பர்கூரில் நவீன பேருந்து நிலையம் அமைத்தல் மற்றும் இளைஞர்களுக்காக விளையாட்டு மைதானங்கள் உருவாக்குதல்.

மாதந்தோறும் மக்கள் குறைதீர் முகாம் நடத்தி குறைகளை நிவர்த்தி செய்தல். இவை வெறும் வாக்குறுதிகள் அல்ல, இவை அனைத்தும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் என வேட்பாளர் இரா.மாதேஷ் தனது அறிக்கையில் உறுதியளித்துள்ளார்

# ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் மதிமுக - பாஜக - தவெக வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல்...

## வெற்றி உறுதியென வேட்பாளர்கள் பேட்டி.



ஈரோடு. ஏப்ரல். 05

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் நேற்று மதிமுக, பாஜக, தமிழக வெற்றி கழகம் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

வருகின்ற ஏப்ரல் 23ஆம் தேதி அன்று தமிழக சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. தொடர்ந்து பதிவான வாக்குகள் மே 4ஆம் தேதி என்ன பட உள்ளது. அடுத்து ஆட்சிப் பொறுப்புக்கு யார் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பு தமிழக வாக்காளர்களிடையே உள்ளது. இதன் நிலையில் திமுக தலைமையிலான மதசார் பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு அவர்கள் தங்களின் தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேபோல் அதிமுக மற்றும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களும் தேர்தல் களத்தில் தீவிரமாக தேர்தல் பிரச்சாரப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேபோல் சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி மற்றும் நடிகர் விஜயின் தலைமையிலான தமிழக வெற்றி கழகம் உள்ளிட்ட கட்சிகளும் தேர்தல் களத்தில் தங்களின் வேட்பாளர்களை அறிவித்து, ஆட்சியைப் பிடிக்க ஆர்வத்துடன் தேர்தல் களத்தில் மக்களை சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில் அரசியல் கட்சிகள் தங்களின் வேட்பு மனுக்களை தாக்கல் செய்து வரும் நிலையில்,.

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்கு முக்கிய கட்சிகளான, திமுக கூட்டணியில் போட்டியிடும் மதிமுக வேட்பாளர் செந்தில்நாதன் நேற்று காலை மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தல் அதிகாரி தியாகராஜனிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். தொடர்ந்து அவர் செய்தியாளர்களை சந்தித்தபோது, தொகுதியில் உள்ள வாக்காளர்களை சந்தித்து வாக்கு சேகரித்து வருவதாகவும் தனக்கு வெற்றி நிச்சயம் என்றும் தெரிவித்தார்.

அதேபோல் நீண்ட இழுபறிக்கு பிறகு அறிவிக்கப் பட்ட பாஜக வேட்பாளர் கிரித்திகா சிவக்குமார் தனது வேட்பமானவை நேற்று காலை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜனிடம் தாக்கல் செய்தார்.

பின்னர் செய்தியாளர் களுக்கு பேட்டி அளித்த அவர், தனக்கு தேர்தல் களம் புதியது என்றாலும், தற்போதைய மொடக்குறிச்சி தொகுதி பாஜக எம்எல்ஏவாக இருக்கும் தனது அத்தையின் ஆலோசனைப்படி மற்றும் கட்சி முக்கிய நிர்வாகிகளின் ஆலோசனைப் படி வெற்றி பெற்ற பின் சிறப்பாக தொகுதி மக்களுக்காக பாடுபடுவேன் என தெரிவித்தார்.

பாஜக வேட்பாளர் கிருத்திகா சிவகுமார் வேட்பு மனு தாக்கல் செய்த போது, அதிமுக ஈரோடு மாநகர் மாவட்ட செயலாளர் கே வி ராமலிங்கம், முன்னாள் அதிமுக எம்எல்ஏ பி பி சிவசுப்பிரமணியம், மற்றும் பாஜகவினர் உடன் இருந்தனர்.

இதேபோல் தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் சண்முகன் தனது வேட்பு மனுவை நேற்று காலை தேர்தல் அதிகாரி தியாகராஜனிடம் தாக்கல் செய்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர் அரசியலும் இந்த தொகுதியும் எனக்கு புதியது என்றாலும் மக்களுக்கான பணிகளை வெற்றி பெற்ற பின் நிச்சயமாக செய்து தருவேன் என்று தெரிவித்தார். இவருடன் தமிழக வெற்றிக்கழக நிர்வாகி கள் உடன் வந்திருந்தனர்.

மூன்று முக்கிய கட்சிகளின் வேட்பாளர்கள் தங்களின் மேற்கு மனுக்களை மொடக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் தாக்கல் செய்த நிலையில் அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

# கோவை சூலூர் தொகுதியில் தவெக சார்பில் சுகுமார் வேட்பு மனு தாக்கல் செய்தார்..



கோவை :மார்ச்05

கோவை சூலூர் சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றிக் கழகம் வேட்பாளர் என்எம் சுகுமார் வட்டாட்சியர் தேர்தல் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

பிறகு செய்தியாளர்களிடம் கூறுகையில் திமுக செந்தில் பாலாஜி கோவையில் தோல்வி அடைவது உறுதி மேலும் எங்கள் கட்சி உறுதியாக வெற்றி பெறும் என்று தெரிவித்தார்.

உடன் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் இருந்தனர்.

## மணப்பாறை பகுதியில் தேர்தல் சம்மந்தமாக வீடியோ கேமர எடுக்க போதிய தொகை தர மறுத்ததால் சங்கம் சார்பில் வீடியோ கேமரா மேன் அனுப்பவில்லை என TRYEAVA சங்கம் அறிக்கை

மணப்பாறை, ஏப்.5–

எதிர்வரும் சட்டசபை தேர்தல் வீடியோ பணிகள் தொடர்பாக தனியார் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால், அந்நிறுவனம் நிர்ணயித்துள்ள குறைந்த ஊதியம் மற்றும் நிபந்தனைகள் நமது உறுப்பினர்களுக்கு ஏற்புடையதாக இல்லை. எனவே, இந்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதில்லை எனச் சங்கம் முடிவெடுத்துள்ளது.

தனிப்பட்ட முறையில் இப்பணிகளில் ஈடுபடும் உறுப்பினர்களுக்கு ஏதேனும் சிக்கல்கள் அல்லது அசௌகரியங்கள் ஏற்பட்டால், அதில் சங்கம் தலையிடாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். என (TRYVA) திருச்சி மாவட்ட போட்டோ வீடியோ அசோசியன் அறிக்கை வெளியிட்டுள்ளது. மேலும் மணப்பாறை போட்டோ வீடியோஸ் சங்கம் சார்பாக இங்கு உள்ள வீடியோகிராபர்களுக்கும் மணப்பாறை போட்டோ வீடியோ எந்த சங்கம் சம்பந்தமும் இல்லை அதற்குண்டான அடையாள அட்டைகள் ஏதும் சங்கத்தின் சார்பாக வழங்கபடவில்லை என்பதை மேற்கண்ட சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

# தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்கள் தாக்கல் செய்ய இன்னும் 1 நாள் மட்டுமே உள்ளது

சென்னை, ஏப்.5

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்ய இன்னும் ஒருநாள் மட்டுமே உள்ளதால் அரசியல் கட்சிகள் இன்று போட்டி போட்டு மனு தாக்கல் செய்தனர். தமிழக சட்டப்பேரவை தேர்தல் வரும் ஏப்ரல் 23ம் தேதி நடக்கிறது. கடந்த 30ம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கியது. முதல் நாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின், நாம் தமிழர் கட்சி சீமான், தவெக தலைவர் விஜய் மற்றும் அமைச்சர்கள், திமுக, அதிமுக வேட்பாளர்கள், சுயேச்சைகள் ஆர்வமுடன் வேட்பு மனு தாக்கல் செய்தனர். காலை 11 மணிக்கு தொடங்கி மாலை 3 மணி வரை வேட்பாளர்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் நாளில் தமிழகம் முழுவதும் 573 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர். ஏப்ரல் 6ம் தேதி வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாளாகும்.

இதைத்தொடர்ந்து 31ம் தேதி (மகாவீர் ஜெயந்தி), 1ம் தேதி (வங்கி விடுமுறை) என 2 நாட்கள் தொடர்ச்சியாக விடுமுறை என்பதால், மனு தாக்கல் செய்யப்படவில்லை. இரண்டு நாட்களுக்கு பிறகு (2ம் தேதி) காலை 11 மணிக்கு மீண்டும் வேட்புமனு தாக்கல் தொடங்கியது. 2வது நாளில் மட்டும் சுமார் 800 பேர் மனு தாக்கல் செய்துள்ளனர். (3ம் தேதி) பெரிய வெள்ளி என்பதால் அரசு விடுமுறை. வேட்புமனு தாக்கல் செய்ய முடியாது. 4ம் தேதி (சனி) வேட்புமனு தாக்கல் செய்யலாம். இதைத்தொடர்ந்து அரசியல் கட்சிகள் ஆர்வமுடன் நேற்று காலை 11 மணி முதல் மால 3 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்தனர். நேற்று மட்டும் சுமார் 600 பேருக்கு மேற்பட்ட அரசியல் கட்சி வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்தனர்.

தொடர்ந்து இன்று (5ம் தேதி) ஞாயிற்றுக்கிழமை என்பதால் அரசு விடுமுறை ஆகும். மனு தாக்கல் செய்ய முடியாது. அடுத்து இறுதி நாளான 6ம் தேதி (திங்கள்) வேட்புமனு தாக்கல் செய்யலாம். அதன்படி, தமிழகத்தில் இன்னும் ஒருநாள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்ய முடியும். இறுதிநாளான வருகிற திங்கட்கிழமை விடுபட்ட திமுக, அதிமுக உள்ளிட்ட அரசியல் கட்சிகள் அனைவரும் வேட்புமனு தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளனர். மேலும், காங்கிரஸ், பாஜக வேட் பாளர்கள் பட்டியல் நேற்று மாலைதான் வெளியானது. அவர்களும் இறுதிநாளான திங்கட்கிழமை தான் வேட்புமனு தாக்கல் செய்கிறார்கள்.

7ம் தேதி வேட்புமனுக்கள் மீது பரிசீலனை நடைபெறும். 9ம் தேதி மாலை 3 மணி வரை வேட்புமனுவை வாபஸ் வாங்கலாம். அன்றைய தினம் மாலை இறுதி வேட்பாளர் பட்டியல்வெளியிடப்படும். சுயேட்சை வேட்பாளர்களுக்கு 9ம் தேதி மாலை 3 மணிக்கு மேல் சின்னம் ஒதுக்கப்படும். அதன் அடிப்படையில், வேட்பாளரின் போட்டோ, சின்னம், பெயர் விவரங்களுடன் பேலட்ஷீட் தயாரிக்கப்பட்டு மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரத்தில் பொருத்தும் பணிகள் நடைபெறும். இதைத்தொடர்ந்து தமிழகத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் பிரசாரம் மேலும் சூடுபிடிக்கும். 21ம் தேதி மாலை 6 மணி வரை பிரசாரம் செய்யலாம். 23ம் தேதி காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி, இடைவிடாமல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். மே 4ம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்






மணப்பாறை சட்டமன்றத் தொகுதி திமுக கூட்டணி வேட்பாளர் ப. அப்துல் சமது தனது வேட்பு மனுவை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் தேர்தல் அதிகாரியிடம் வழங்கினார்



மணப்பாறை சட்டமன்ற தொகுதி திமுக கூட்டணி வேட்பாளர் ப அப்துல்சமது அவர்களை ஆதரித்து திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி எம்பி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்



மணப்பாறை சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றி கழக வேட்பாளர் ஆர்.கதிரவன் தனது குடும்பத்துடன் வந்து வேட்பு மனுவை தேர்தல் அதிகாரி ஜெயசித்ர கலாவிடம் வழங்கினார்.

## வந்தவாசியில் தவெக வேட்பாளர் வேட்புமனு தாக்கல்..!



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி (தனி) சட்டமன்றத் தொகுதிக்கு போட்டியிடும் தமிழக வெற்றிக் கழக வேட்பாளரும், மாவட்ட செயலாளருமான உதயகுமார் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் மது செழியன் அவர்களிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் இணை செயலாளர் கார்த்திகேயன், வழக்கறிஞர் அணி உதயசங்கர், தொழில்நுட்ப அணி மணிகண்டன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## வந்தவாசி சட்டமன்றத் தொகுதியில் அதிமுக வேட்பாளர் வேட்புமனு தாக்கல்..!



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி (தனி) சட்டமன்றத் தொகுதிக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அதிமுக வேட்பாளர் ராணி பெருமாள் தனது வேட்புமனுவை தேர்தல் நடத்தும் அலுவலர் என். மதுசெழியனிடம் வழங்கினார். உடன் மாவட்ட செயலாளர் முக்கூர் என்.சுப்பிரமணியன், தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் ஜாகீர் உசேன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாஸ்கர் ரெட்டியார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421